**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2016**

**A041 இலக்கிய வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. எட்டுத்தொகையினுள் அகமும் புறமும் சேர்ந்த நூல் எது?
2. முல்லைப்பாட்டின் ஆசிரியர் யார்?
3. முத்தமிழ்க் காப்பியம் எது?
4. மணிமேகலை மலர் பறிக்கச் சென்ற வனத்தின் பெயர் யாது?
5. மூன்று ஆழ்வார்களும் சந்தித்த இடத்தினைக் குறிப்பிடுக.
6. ஆறாம் நூற்றாண்டின் சமண இலக்கியங்கள் எவையெவை?

7. காஞ்சிக்கு வருகை தந்த சீனவழிப்போக்கன் யார்?
8. நம்மாழ்வார் பிறந்த ஊர் எது?
9. பாட்டியல் நூல்களில் பழமையானது எது?
10. ஆளவந்தாரின் சீடர் யார்?
11. கச்சிக்கலம்பகம் பாடியவரைக் குறிப்பிடுக.
12. இராமலிங்க அடிகளின் உரைநடை நூல்கள் எத்தனை? அவையாவை?
13. இசுலாமியத் தாயுமானவர் யார்?
14. தமிழின் மறுமலர்ச்சிக் காலம் எது?
15. தமிழ்த்தாத்தா என்றழைக்கப்படுபவர் யார்?

**பிரிவு – 2**

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. தொல்காப்பியத்தின் நூல் அமைப்பினை எழுதுக.
2. காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பைப் பட்டினப்பாலை வழி விளக்குக.
3. முத்தொள்ளாயிரம் குறித்து சிறு குறிப்பு வரைக.
4. இலக்கண நூலான நன்னூல் குறித்து வரையறை செய்க.
5. திருவிளையாடற் புராணத்தின் சிறப்புகளை எழுதுக.
6. மணிப்பிரவாள நடை குறித்தெழுதுக.
7. வீரமாமுனிவரின் தமிழ்த்தொண்டினை விளக்குக.
8. 19 –ஆம் நூற்றாண்டின் உரைநடை வளர்ச்சியினை எழுதுக.

**பிரிவு – 3**

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் குறித்து எழுதுக?

(அல்லது)

(ஆ) இரட்டைக் காப்பியங்கள் குறித்து விளக்கி வரைக.

2. (அ) சைவத்திருமுறைகளின் வழி அறியலாகும் செய்திகளை தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) பதினோராம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண நூல்கள் குறித்து கட்டுரை வரைக.

3. (அ) ஐரோப்பிய கிறித்தவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) நாவலின் வகைகள் குறித்து கட்டுரை வரைக.